


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2025) தலைமைச் செயலகத்தில், வி.எம்.எஸ். சுபகுணராஜன் அவர்களால் தொகுக்கப்பட்டு, ஆர்.விஜய சங்கர் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட, தந்தை பெரியார் அவர்கள் சாதி ஒழிப்பு மாநாடுகளில் ஆற்றிய உரைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலான "CASTE and the CRISIS of DIGNITY: Periyar EV Ramasamy Speaks at Caste Association Meetings and Caste Abolition Conferences 660 வெளியிட, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் துரைமுருகன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் மாநில திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், வி.எம்.எஸ். சுபகுணராஜன் மற்றும் ஆர்.விஜய சங்கர் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 23 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் நான்கு தளங்கள் கொண்ட புதிய மருத்துவக் கட்டடம் கட்டப்பட்டு, 225 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வேலூரில் மினி டைடல் பூங்கா!... முதல் பக்கத் தொடர்ச்சி

**வேலூர் மினி டைடல் பூங்கா திறந்து வைத்தல் மற்றும் நாமக்கல் மினி டைடல் பூங்கா அடிக்கல் நாட்டுதல்**


முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் திறந்து வைக்கப் பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்கா 32 கோடி ரூபாய் செலவில், தரை மற்றும் நான்கு தளங்களுடன், 60,000 சதுர அடி கட்டுமான பரப்பளவில், 600 தகவல் தொழில் நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில், அனைத்து நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், முதலமைச்சர் அவர்களால் நேற்று அடிக்கல் நாட்டப் பட்ட நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் மினி டைடல் பூங்கா 63,200 சதுர அடி கட்டுமானப் பரப்பளவில் சுமார் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது, வேலூர் மினி டைடல் பூங்காவினை முழுமையாக குத்தகைக்கு எடுத்துள்ள M/s. AGS Health care நிறுவனத்திற்கு தள ஒதுக்கீட்டு ஆணையை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் வேலூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் வசித்துவரும் படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டங்களிலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலைவாய்ப்புகள் ஏற்படுவதுடன் அப்பகுதிகள் சமூக பொருளாதார வளர்ச்சி பெறவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வரம், திவ்ய பிரபந்த பாடசாலை மற்றும் வேத ஆகம பாடசாலை ஆகிய 18 பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாக பயிற்சி பெறும் 297 மாணவ, மாணவியர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை ரூ.10,000/ மற்றும் பகுதி நேரமாக பயிற்சி பெறும் 66 மாணவ, மாணவியர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை ரூ.5,000/ ஆகியவற்றை வழங்கிடும் அடையாளமாக 10 மாணவ, மாணவியர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகைக்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் – பரப்புரைகள் நடத்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்திட

# இன்று (நவ.6) அனைத்துக் கட்சிக் கூட்டம்!

## மூத்த அமைச்சர்கள் தலைமையில் நடைபெறுகிறது!

**சென்னை, நவ. 6-**

**தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் மற்றும் பரப்புரைகள் நடத்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பதற்கு தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று (6.11.2025) மூத்த அமைச்சர்கள் தலைமையில் நடைபெறுகிறது.**

கடந்த 27.9.2025 அன்று கரூரில் நடைபெற்ற அரசியல் பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் சமீபத்தில் அறிவுறுத்திய தன்படி, தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் மற்றும் பரப்புரைகள் நடத்துவது குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக தங்கள் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிப்பதற்காக தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஓர் ஆலோசனைக் கூட்டம் இன்று (6.11.2025) காலை 10.30 மணிக்கு சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10ஆவது தளத்தில் மூத்த அமைச்சர்களின் தலைமையில் நடத்தப்பட உள்ளது.

இக்கூட்டத்தில் பங்குபெறக் கோரி அரசு தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அவர்களின் அழைப்புக் கடிதம் மேற்படி அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### எஸ்,டி,கருணாநிதி தலைமை! ந,கோபால் - இரா,சதீஷ்குமார் வரவேற்புரையில்

# திருப்பெரும்புதூர் வடக்கு - தெற்கு நகரக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா,மோ,அன்பரசன் - கழகப் பொருளாளர் டி,ஆர்,பாலு எம்,பி, சிறப்புரை!

*காஞ்சிபுரம், நவ. 06*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரு ம்புதூர் வடக்கு, தெற்கு மற்றும் நகரம் சார்பில் எனது வாக்குச் சாவடி! வெற்றி வாக்குச்சாவடி! பி.எல்.ஏ2, பி.டி.ஏ, பி.எல்.சி. மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், கழகச் செயல் வீரர்கள் கூட்டம் இன்று (06.11.2025 வியாழக் கிழமை) காலை 8 மணி அளவில், சுங்கு வார்சத்திரம், திருமங்கலம், குரு மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழுப் பெருந்தலைவர் எஸ்.டி.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ந.கோபால், திருப்பெரும்புதூர் நகர கழகச் செயலாளர் இரா.சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் நகர மன்றத் தலைவர் சாந்தி சதீஷ், தொகுதிப் பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி மா.கணே ஷ் பாபு, ப.இராமமூர்த்தி, மாலதி போஸ்கோ, இந்திராணி சுப்பிரமணி, வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஜெ.சிவபாதம், பி.கலைமோகன், தி.பிரபாகரன், நளினா சின்ன கண்ணு, மா.மணிவண்ணன், ச.வேலுமணி, எ.நாசர், இ.முனிகிருஷ்ணன், பொடவூர் பி.ரவி, இ.ரா.பிரகாசம், நா.சத்யா, ஏ.முரளிதரன், இ.ரா. வெங்கடேசன், எஸ். டி.கே.சபரி ராஜன், ஜி.எஸ். குமார், வெங்கடேசன், சந்தோஷ்குமார்,

தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் ஏ.மோகனன், க.ரவிச்சந்திரன், ஜெகன்குமார், சுபரஞ்சனி கன்னியப்பன், ப.பரமசிவன், எஸ்.ஏ.சர்தார் பாஷா, பி.ஆர்.நேரு, ஜா.செந்தில் தேவராஜ், கு.ப.முருகன், எஸ்.டி.ஜார்ஜ், கோ.விநாயகமூர்த்தி, த.தணிகாசலம், இரா.அருண் பாரத், க.முருகன், ச.தேவேந்திர பாபு, ஏ.டோமினிக், பா.முத்து குமாரசுவாமி, எ.ஹரிகிரு ஷ்ணன், ஓவியா முருகன்,

நகரக் கழக நிர்வாகிகள் ஜெ.வேணுகோபால், எஸ். பி.சி.குமார், மு.ஆறுமுகம், ஆர்.விஜயலட்சுமி, பி.குமார், ஆர்.காத்தவராயன், ஜி. கே.கார்த்திகேயன், பி.ஆர். சம்பத், என்.சாதிக் பாட்ஷா, எஸ்.பாபு, எஸ்.ரவி, பி.சரவணன், கே.ஸ்ரீதர் மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகர, வார்டு கவுன்சிலர்கள், தெற்கு ஒன்றிய ஊராட்சி மன்றத் தலைவர்கள், வடக்கு ஒன்றியக் கிளைக் கழகச் செயலாளர்கள், தெற்கு ஒன்றியக் கிளைக் கழகச் செயலாளர்கள், நகர வார்டுச் செயலாளர்கள், வடக்கு, தெற்கு, நகரக் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்டக் குழு உறுப்பினர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ். கே.பாலா (எ) பால்ராஜ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சூ.டான் போஸ்கோ ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (05.11.2025) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், தமிழ்நாட்டில் பயிர் காப்பீட்டு திட்டம், வடகிழக்கு பருவ மழையால் நீரில் மூழ்கிய பயிர்களின் கணக்கெடுப்பு மற்றும் முக்கிய திட்டங்களின் செயலாக்கம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் த. ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா,மோ,அன்பரசன் 1500 பேருக்கு நலஉதவி வழங்குகிறார்!

# மாநகரப் பிரதிநிதி ஆர்.பன்னீர்செல்வம் தாயார் ஆர்.முனியம்மாளின் 2 ஆம் ஆண்டு நினைவு நாள்!

### எஸ்,ஆர்,ராஜா எம்,எல்,ஏ - இ,கருணாநிதி எம்,எல்,ஏ, பங்கேற்பு! மாடம்பாக்கம் ஆ,நடராஜன் தலைமை!

*தாம்பரம், நவ. 06*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம், நினைவில் வாழும் எம்.வி.ராமச்சந்திரனின் மனைவியும், தாம்பரம் மாநகர கழக பிரதிநிதி ஆர் பன்னீர்செல்வம் தாயார் ஆர்.முனியம்மாள் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முன்னிட்டு பார்வையற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்றோர்களுக்கும், பகுதி வாழ் மக்கள் 1500 ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (07.11.2025 வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில், பெரியார் நகர் மெயின் ரோடு, மாடம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

தாம்பரம் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர், மாநகராட்சி நகரமைப்பு குழுத் தலைவர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, மாவட்டத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், திருநீர்மலை த.ஜெயக்குமார், அ.தமிழ்மாறன், எஸ்.இந்திரன், ஏ.வி.எம்.இளங்கோவன், பொன்.சதாசிவம், வி.ஜெயராமன், இ.எம்.சாம்சன், டி.ராஜாராம், எஸ்.விமலா, ரா.நவீன், எஸ்.வேலவன், ஜெ.செல்வம், பொ.செந்தில்குமார், எம். செந்தில்குமார், ரமாதேவி செந்தில்குமார் எம்.சி, எம். கண்ணன் (எ) சாந்தகுமார், எம்.பெருமாள், எம்.கே. மோகனரங்கன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

குடும்பத்தினர் ஆர். குமார், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.ராதா கிருஷ்ணன், ஆர்.புருஷோத்தமன், லலிதா கிருஷ்ணன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 12 | த.பொ. / வ.செ.அ.மி.நி - III | Providing additional hydraulic power pack system for bottom ash hopper No 2 including supply |
| 195 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Procurement of NB 200 Carbon Steel Seamless pipes and bends |
| 113 | மே.பொ. / இ-II / வ.செ.அ.மி.நி - 1 | NCTPS I SE M II Circle ECHS Dn Renewal and strengthening trestles brazings BCN 42A and 42B |
| 246 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 1 | Flame scanner guide tube Assembly |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

**செ.ம.தொ.இ/6002/ஒப்பந்தப்புள்ளி/2025**

**தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் பெயர் |
|---|---|---|
| E 270 | த.பொ. / செ / வடக்கு | Procurement of Multi Function Transducers |
| TS 162 | த.பொ. / செ / வடக்கு | Scrap tender |
| M 216 | த.பொ. / பொ.மே | Printing and supply of Monthly Calendars for the year 2026 |

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளின் (e-tender) பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tnpdcl.org, www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in**

**செ.ம.தொ.இ/6003/ஒப்பந்தப்புள்ளி/2025**